

# உடல்நல காப்புறுதி

## டையபிடீஸ் உள்ளவர்களுக்கு உதவிகரமான விருப்பத்தேர்வுகள்.

டையபிடீஸ் உள்ளவர்கள் தேவைப்பொருட்கள் எடுக்கவேண்டிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபாயங்களுக்கு மிக அதிகமான செலவுகளை எதிர்நோக்கலாம். தகுதி உள்ளவர்களுக்கு அந்த பாரத்தை குறைக்க பல விருப்பத்தேர்வுகள் உண்டு.

### கண் கவனிப்பு சேவைகள்

காப்புறுதி அளிப்பவர்: ஒன்டாரியோ உடல்நல காப்புறுதித் திட்டம் (Ontario Health Insurance Plan (OHIP) ஓஹிப்))

| யாருக்கு தகுதியுள்ளது? | எந்த சேவைகளுக்கு? |
|---|---|
| 65 அல்லது அதற்கு மேற்பட்ட வயது நோயாளிகள் மற்றும் 19 அல்லது அதற்கு கீழான வயது நோயாளிகள் | 12 மாதங்களுக்க ஒரு முறை நடைமுறையான கண் பரிசோதனையும் அதை தொடர வேண்டிய தேவையான மதிப்பீடுகளும். |
| கீழ்கண்ட ஏதாவது நிலையுள்ள 20- லிருந்து 64 வயது நோயாளிகள்: டையபிடீஸ் கண் அழுத்த நோய் கண் திரை நோய் விழித்திரை நோய் மங்கு பார்வை பார்வைக் கள குறைபாடுகள் கருவிழி நோய் மற்றம் மாறுகண் பார்வை | ஒரு பார்வை சோதனை நுட்பர் அல்லது மருத்துவரால் 12 மாதங்களுக்க ஒரு முறை பெரிய கண் பரிசோதனையும் அதை தொடர வேண்டிய தேவையான மதிப்பீடுகளும். |
| எல்லா வயது நோயாளிகளும். | மருத்துவ ரீதியாக தேவைப்படும் மருத்துவரால் அளிக்கப்படும் கண் கவனிப்பு சேவைகள் |

தொடர்பு:

- ServiceOntario: 1-800-268-1154 (ஒன்டாரியோவில் மட்டும் கட்டணமின்றி) டோரான்டோவில 416-314-5518
- வருகைத் தாருங்கள் **www.health.gov.on.ca/english/public/pub/ohip/eyecare.html**

Ontario

## உடல்நல காப்புறுதி –

டையபிடீஸ் உள்ளவர்களுக்கு உதவிகரமான விருப்பத்தேர்வுகள்.

### மருந்துச்சீட்டில் குறித்த மருந்துகளும் தேவைப்பொருட்களும்

காப்புறுதி அளிப்பவர்: ஒன்டாரியோ உடல்நலம் மற்றும் நீண்ட கால கவனிப்பு அமைச்சகம் (Ministry of Health and Long-Term Care), ஒன்டாரியோ மருந்து பலன் திட்டம் (Ontario Drug Benefit Plan (ODB) ஓடிபி)

| யாருக்கு தகுதியுள்ளது? | எவ்விதத் தேவைப் பொருட்களுக்கு? |
|---|---|
| ஒரு மாகாண சமூக உதவித் திட்டத்தில் உள்ள நோயாளிகளும் 65 அல்லது அதற்கு மேலான வயதவர்களும். | பெரும்பாலன இன்சுலின் வகைகளும் வாய்வழி மருந்துகளும் (hypoglycemics) மற்றும் இரத்த பரிசோதனை கீற்றுகளும் (blood testing strips) உள்ளடக்கிய டையபிடீஸ் தேவைப் பொருட்கள். |

கவனிக்க: நீங்கள் 65 அல்லது அதற்கு மேலான வயதவராகவும் ஓடிபி உபயோகித்தும் வருட வருமானம் $16,018 அல்லது மேலாகவும் (தம்பதிகளானால் மொத்த வருமானம் $24,175 அல்லது மேல்), நீங்கள் ஒரு வருடாந்தர குறைப்புத்தொகையாக $100 முன் வைக்கவேண்டும். அதற்குப்பின் ஒவ்வோரு மருந்துக்குறிப்புக்கம் $6,11 நீங்கள் செலுத்தவேண்டும். உங்கள் வருட வருமானம் $16,018 அல்லது தம்பதிகளானால் $24,175 -க்கும் கம்மியாக இருந்தால், எந்த முன் வைப்பும் தேவைப்படாது மற்றும் $2 மருந்துக்குறிப்பு கட்டணம் செலுத்தவேண்டும்.

டையபிடீஸுக்கு ஓடிபி மருந்தளவு கோட்பாட்டில் பட்டியலிடப்பட்ட பொருட்கள்:

- வாய்வழி டையபிடீஸுக்கு எதிரான மருந்துகள் (Oral antidiabetic agents)
- இன்சுலின்கள் (Insulins)
- பரிசோதனை கீற்றுகள் (Testing strips)

**தொடர்பு:**

- உங்கள் உள்ளூர் சமூக சேவைகள் ஏஜென்ஸி நீங்கள் இந்தக் காப்புறுதிக்கு தகுதியுள்ளவரா என்று கண்டுப்பிடிக்கும். உங்கள் உள்ளூர் சமூக சேவைகள் ஏஜென்ஸியை பற்றி அறிந்துக்கொள்ள உங்கள் வட்டார அலுவலகத்தை தொடர்பு கொள்ளுங்களை: **www.mcss.gov.on.ca/en/mcss/regionalMap/regional.aspx**
- உங்கள் மருந்தாளுனர்
- வருகை தாருங்கள் **www.health.gov.on.ca/english/providers/program/drugs/odbf_mn.html**

காப்புறுதி அளிப்பவர்: ஒன்டாரியோ உடல்நல மற்றும் நீண்ட கால கவனிப்பு அமைச்சகம் ட்றில்லியம் மருந்து திட்டம் (Trillium Drug Program)

| யாருக்கு தகுதியுள்ளது? | எவ்விதத் தேவைப் பொருட்களுக்கு? |
|---|---|
| தங்கள் வருடாந்தர வருமானத்துக்கு எதிரே தங்கள் மருந்து செலவு மிக அதிகமாக உள்ள நோயாளிகள். இந்த திட்டத்தில் அனுகூலம் பெற நீங்கள் வருடம் முழுதிலும் நான்கு பாகங்களாக முன் பணம் கட்டவேண்டும். இந்த கட்டணம் உங்கள் வீட்டு வருமான மறு ஆய்வைப் பொறுத்துள்ளது. | பெரும்பாலன இன்சுலின் வகைகளும் வாய்வழி மருந்துகளும் 6. மற்றும் இரத்த பரிசோதனை கீற்றுக்குளும் உள்ளடக்கிய டையபிடீஸ் தேவைப் பொருட்கள். |

**தொடர்பு :**

- 1-800-575-5386
- வருகை தாருங்கள் **http://health.gov.on.ca/en/public/programs/drugs/programs/odb/opdp_trillium.aspx**

| காப்புறுதி அளிப்பவர்: (ஒன்டாரியோ உடல்நல மற்றும் நீண்ட கால கவனிப்பு அமைச்சகம் அஸிஸ்டிவ் டிவைஸஸ் திட்டம் (Assistive Devices Program (ADP)) ஏபிடி) | |
|---|---|
| **யாருக்கு தகுதியுள்ளது?** | **எவ்விதத் தேவைப் பொருட்களுக்கு?** |
| இன்சுலின் ஊசியாக தினசரி உபயோகிக்கும் 65 அல்லது மேல் வயதானவர்கள் | இன்சுலின் ஊசி போட வாங்க வேண்டிய ஊசி சிரிஞ்சுகளுக்கான வருடாந்தர தொகையாக $170 வருடம் ஒரு முறை அளிக்கப்படும். |
| குழந்தைகள் வாலிபர்கள் மற்றும் டைப் 1 டையபிடீஸ் உள்ள வயதுவந்தவர்கள் இந்த திட்டத்தின் தகுதி கட்டளை விதிகளை சந்திப்பவர்கள். ஒரு ஏடிபி பதிவு செய்த டையபிடீஸ் கற்பிப்புத் திட்டத்தால் நீங்கள் மதிப்பீடும் பின் தொடர்ந்து இருக்கவேண்டும்.<br><br>தொடர்ந்து தகுதிப்படும் நோயாளிகள் தகுதி கட்டளை விதிகளை சந்திப்பதாக காட்ட வேண்டும். | • இந்தத் திட்டத்தில் பட்டியலிடப்பட்ட இன்சுலின் பம்ப்பின் 100 சதவிகித செலவு இது நோயாளிக்கு ஏபிடி அங்கீகரித்த விலையான $6,300-க்கு விற்கப்பட வேண்டும்.<br><br>• இன்சுலின் பம்ப்புக்கான நிதி ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கலாம், அப்படி அந்த பம்ப் நன்றாக செயல்முறையில் இல்லையென்றால்.<br><br>• தொடர்பான மற்ற தேவை பொருட்களுக்காக நான்கு சமமான தொகையாக (ஒவ்வொன்றும் $600) வருடாந்தர $2,400 நிதி நேரே நோயாளிக்கோ அல்லது சட்டபூர்வ முகவருக்கோ அளிக்கப்படுகிறது. பம்ப்பை வேலைப்படுத்த தேவையானவற்றை வாங்க இந்த நிதித் தொகை உபயோகப்படுத்தப்படவேண்டும் மற்றும் ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்கவேண்டும். |

**தொடர்பு:**

- அஸிஸ்டிவ் டிவைஸஸ் திட்டம (Assistive Devices Program): 1-800-268-6021 (ஒன்டாரியோவில் மட்டும் கட்டணமின்றி). டோரான்டோவில: 416-327-8804

| காப்புறுதி அளிப்பவர்: ஒன்டாரியோ உடல்நல மற்றும் நீண்ட கால கவனிப்பு அமைச்சகம் அஸிஸ்டிவ் டிவைஸஸ் திட்டம் கனேடியன் டையபிடீஸ் சங்கத்தால் (Canadian Diabetes Association) நிர்வகிக்கப்படுகிறது. | |
|---|---|
| **யாருக்கு தகுதியுள்ளது?** | **எவ்விதத் தேவைப் பொருட்களுக்கு?** |
| இன்சுலினை உபயோகிக்கும் அல்லது கர்ப்பகால டையபிடீஸ் உள்ள தகுதி உள்ளவர்களுக்கு. | • $75 வரைக்கும் ஒரு இரத்த குளுக்கோஸ் மானிடரின் 75 சதவிகித விலை அல்லது $300 வரை ஒரு பேசும் இரத்த குளுக்கோஸ் மானிடரின் 75 சதவிகித விலை ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை இந்த நிதியை நோயாளிகள் அனுகலாம்.<br><br>• வருடம் $820 வரை லேன்ஸெட் மற்றும் பரிசோதனை கீற்றுகளின் விலையில் 75 சதவிகிதம். |

**தொடர்பு:**

கனேடியன் டையபிடீஸ் சங்கம் (Canadian Diabetes Association): 1-800-361-0796

# உடல்நல காப்புறுதி –

டையபிடீஸ் உள்ளவர்களுக்கு உதவிகரமான விருப்பத்தேர்வுகள்.

## நல உணவு வல்லுனர்கள்

டையபிடீஸ் கற்பிப்பு மையங்களில் (Diabetes Education Centres) கூர்ந்த கவனிப்பு மற்றும் சமூக கவனிப்பு சூழ்நிலைகளில் வேலை புரியம் பதிவுற்ற நலஉணவு வல்லுனர்கள் ஓஹிப்-பினால் காப்புறுதி அளிக்கப்படுகிறார்கள். தனிமுறையான தொழில் புரியும் பதிவுற்ற நலஉணவு வல்லுனர்களுக்கு வருகை கட்டணத்தை தனிப்பட்ட காப்புறுதி அளிக்கலாம். ஒரு தனிமுறையான தொழில் புரியும் பதிவுற்ற நலஉணவு வல்லுனரின் சேவைகளுக்கு உங்களுக்கு காப்புறுதி இருக்கா என்று அறிய உங்கள் காப்புறுதி அளிப்பவரை தொடர்பு கொள்ளுங்கள். டையபிடீஸ் கற்பிப்பு மையம் அல்லது தனிமுறையான தொழில் புரியும் பதிவுற்ற நலஉணவு வல்லுனரை கண்டுப்பிடிக்க இந்த எண்ணை அழையுங்கள் அல்லது கீழுள்ள வலை தளத்தைப் பாருங்கள்.

**தொடர்பு:**

- **தனிமுறையான தொழில் புரியும் பதிவுற்ற நலஉணவு வல்லுனரை அழைக்க** 1-877-510-510-2
- வருகை தாருங்கள் **www.ontario.ca/eatright**

## பாத கவனிப்பு

காப்புறுதி அளிப்பவர்: **ஒன்டாரியோ உடல்நல காப்புறுதிதி திட்டம் (OHIP)**

| யாருக்கு தகுதியுள்ளது? | எவ்விதத் தேவைப் பொருட்களுக்கு? |
|---|---|
| ஒன்டாரியோவில் வசிப்பவர்கள் | டையபிடீஸ் கவனிப்பை சார்ந்த எல்லா மதிப்பீடுகளும் ஒரு மருத்துவரால் தாமே செய்யப்பட்டது, பாத கவனிப்பை உள்ளீட்டு பாதவிரல் நகங்களை வெட்டுவதற்கான சேவைகளுக்கு ஓஹிப் கட்டணம் செலுத்தாது. |

**தொடர்பு:**

- ServiceOntario: 1-800-268-1154 (**ஒன்டாரியோவில் மட்டும் கட்டணமின்றி). டோரான்டோவில்:** 416-314-5518

Tamil Catalogue No.013109 Revised March 2014 © Queen's Printer for Ontario 2014

Ontario